ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

भवाख्ये कान्तारे महति विषयव्याळमथितं
भ्रमन्तं दुःखार्तं जननि गिरिजे त्वत्सुतमिमम् ।
अनाथं त्वं नीत्वा तव चरणमूलं करुणया
कदा दृष्ट्वा धन्यं महितनिजदृष्ट्या प्रकलये: ॥

𑌭𑌵𑌾𑌖𑍍𑌯𑍇 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍇 𑌮𑌹𑌤𑌿 𑌵𑌿𑌷𑌯𑌵𑍍𑌯𑌾𑌳𑌮𑌥𑌿𑌤𑌂
𑌭𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑌂 𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌤𑌂 𑌜𑌨𑌨𑌿 𑌗𑌿𑌰𑌿𑌜𑍇 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑍁𑌤𑌮𑌿𑌮𑌮𑍍 ।
𑌅𑌨𑌾𑌥𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌨𑍀𑌤𑍍𑌵𑌾 𑌤𑌵 𑌚𑌰𑌣𑌮𑍂𑌲𑌂 𑌕𑌰𑍁𑌣𑌯𑌾
𑌕𑌦𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌧𑌨𑍍𑌯𑌂 𑌮𑌹𑌿𑌤𑌨𑌿𑌜𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌲𑌯𑍇𑌃 ॥

ஸகலப்பிராணிகளுக்கும் தாயாராய் விளங்கும் ஹே கிரிஸுதே ! ஹே பார்வதீதேவி ! ஸம்ஸாரமென்று பெயர்வாய்ந்தபெரியகானகத்தில் விஷயமென்கிற ஸர்ப்பங்களாலும் துஷ்டமிருகங்களாலும் மிகவும் ஹிம்ஸிக்கப்பட்டவனும் அதிக துக்கத்தால் கஷ்டப்படுகிறவனும் அதிலிருந்தும் வெளியில்வர வழியறியாமல் சுத்துகிறவனும் தன்னை ரக்ஷிப்பதற்கு வேறு பிரபு இல்லாதவனும் உன்னுடைய புத்திரனுமிருக்கும் இந்த ஜனத்தை நீ இயற்கையில் விளங்கும் கருணையால் உன்னுடைய திருவடிகளின் அடியில் வரும்படிசெய்து உனது அன்பார்ந்த வீக்ஷணத்தால் பார்த்து எப்பொழுது தன்யனாகச் செய்வாய்.

ஸம்ஸார துக்கத்தால் மிகவும் வருந்தும் ஒரு பக்தர் ஸ்ரீ பரமேசுவரியைப் பார்த்து உன்னுடைய இயற்கையாய் விளங்கும் கருணைக்கு என்னை பாத்திரனாகச் செய்து வேறு கதியற்ற என்னை உன் சரணாரவிந்தங்களையடையும்படிச் செய்து மிகவும் மஹிமைபெற்ற உன் திருஷ்டியால்பார்த்து எப்பொழுது தன்யனாகச் செய்வாய் சீக்கிரம் என்னை உன் திருவடிக் கழைத்து அனுக்கிரஹிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
விபவ-ஹூ வைகாசி-மீ ௪௨

# உபதேசபஞ்சகம்.

वेदो नित्यमधीयतां तदुदितं कर्म स्वनुष्ठीयतां
तेनेशस्य विधीयतामपचितिः काम्ये मतिस्त्यज्यताम् ।
पापौघः परिधूयतां भवसुखे दोषोऽनुसन्धीयता-
मात्मेच्छा व्यवसीयतां निजगृहात्तूर्णं विनिर्गम्यताम् ॥

𑌵𑍇𑌦𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌧𑍀𑌯𑌤𑌾𑌂 𑌤𑌦𑍁𑌦𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌤𑌾𑌂
𑌤𑍇𑌨𑍇𑌶𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑌾𑌮𑌪𑌚𑌿𑌤𑌿𑌃 𑌕𑌾𑌮𑍍𑌯𑍇 𑌮𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌪𑌾𑌪𑍌𑌘𑌃 𑌪𑌰𑌿𑌧𑍂𑌯𑌤𑌾𑌂 𑌭𑌵𑌸𑍁𑌖𑍇 𑌦𑍋𑌷𑍋𑌽𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑍀𑌯𑌤𑌾-
𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌚𑍍𑌛𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍀𑌯𑌤𑌾𑌂 𑌨𑌿𑌜𑌗𑍃𑌹𑌾𑌤𑍍𑌤𑍂𑌰𑍍𑌣𑌂 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।

உலகிலுள்ள ஸகல ஜனங்களும் அஃஞானத்தால் அறிவு குன்றி ஸம்ஸாரமென்று பெயர்கொண்ட கடலில் மூழ்கி மோக்ஷமென்கிற பரமபுருஷார்த்தத்தைப் பெறுவதற்குற்ற நெறியறியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஸமயத்தில் கருணாநிதியாயும் கலைமகளின் கணவன் முதலான விண்ணவ கணங்களால் போற்றப்பட்டவரும் கைலாஸாதிபதியுமான ஸ்ரீ பரமேசுவரன் இம்மாநிலத்தில் மாந்தராகத் திருவுருவங்கொண்டு தோன்றி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியார் என்று பலராலும் புகழக்கூடிய பெயருடன் ஆங்காங்கு ஸஞ்சாரம் செய்து துர்வாதிகளை வாதப் போரில்வென்று ஷண்மதஸ்தாபானம்செய்து தமதுகாலத்திற்குப் பிறகும் பூமியிலுள்ள எல்லா ஜனங்களையும் ஸம்ஸார துக்கத்தை விலக்கி மேன்மைபொருந்திய மோக்ஷசுகத்தைப் பெறும்படி செய்யவேண்டுமென்று அந்தந்த அதிகாரிகளுக்குத் தகுந்தபடி பல ப்ரகாணங்களை இயற்றி அனுக்கிரஹித்திருக்கிறார்களென்பது பிரசித்தமே. அவ்விதம் அனுக்கிரஹிக்கப்பட்ட பிரகாணங்களுக்குள் ஒன்றான உபதேசபஞ்சகம் என்கிற சிறிய பிரகாணத்தின்

பொருளை நம் நேயர்களறிந்து அனுஷ்டித்துப் பயனையடையவேண்டி எம் சிற்றறிவிற்கெட்டிய வரையில் அதின் கருத்தை வெளியிட முன் வருகிறோம்.

**वेदो नित्यमधीयतां** வெடிஷா மிக்ருயேபதாம் இந்த சுலோகத்தின் பூர்வபாகத்தால்த்ரைவர்ணிகர்என்கிற பிராம்மண, க்ஷத்திரிய, வைச்ய என்கிறஇம்மூன்று ஜாதிகள் அனுஷ்டிக்க வேண்டிய முக்கியமான ஸ்வதர்மங்களையும் சிற்சில பாகங்களால் நான்காவது வர்ணமான சூத்திரஜாதிக்கு வேண்டிய தர்மங்களையும் ஸ்ரீ பகவத்பாதாசார்யார் உபதேசிக்கிறார்.

எப்பொழுதும் வேதாத்தியயனம் செய்யவேண்டும். அத்தியயனம் செய்யவேண்டுமென்று கூறியிருப்பதால் சாஸ்திரங்களில் கூறப்பட்ட இலக்கணப்படியுள்ள ஸத்குருவை சிஷ்யன் இருக்கவேண்டிய முறைப்படி அடைந்து வேதத்தைக் கற்கவேண்டுமேயல்லாமல் எவ்வளவு அறிவாளியாயிருந்தாலும் தானாகவோ அல்லது குருவாகப் பாவிப்பதற்கு அருகமில்லாதவரை குருவாகவடைந்தோ சிஷ்யதர்மத்தை நன்கு அனுஷ்டிக்காமலோ வேதங்களைக்கற்கக்கூடாதென்றும்இந்த நியமத்தைமீறியாராவது அத்யயனம் செய்தாலும் அது பயன்படாதென்றும் அறிவிக்கப்படுகிறது நித்யம் என்று சொல்லியிருப்பதால் ஒவ்வொரு தினமும் அவச்யம் அற்ப்பாகமாவது அத்யயனம் செய்யவேண்டுமென்றும் இதினால் யாது பயன், எதற்காகச் செய்யவேண்டுமென்று விசாரிக்கக் கூடாதென்றும் துவிஜர்களாகப் பிறவியேற்பட்டால் அவச்யம் அவர்களுக்கு இது செய்யவேண்டிய கடமையென்றும் போதிக்கப்படுகிறது. இந்த அத்யயனமானது துவிஜர் என்று சொல்லப்படும் முதல் மூன்று ஜாதியிலுள்ள புருஷர்களுக்கு மாத்திரமேயல்லாமல் அந்த ஜாதியிலுள்ள ஸ்திரீகளுக்கும், சூத்திரர்களுக்கும் கூடாது. இந்த அபிப்பிராயத்தையே சுருதியும் ஸ்திரீ சூத்திரர்கள் வேதாத்யயனம் செய்யக்கூடாதென்றுஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது. இவ்விதம் நிஷேதம் இருப்பதால்தான் மேன்குலத்திலுதித்த ஸ்திரீகளும் அத்யயனம் செய்யாமலே இருக்கிறார்கள். இதினால் தற்காலத்திலுள்ள சிலர் பிராமணர்கள் பக்ஷபாதத்தால் தம் ஜாதிக்குமாத்திரம் அதிகப்பெருமை வேண்டுமென்று கெட்ட எண்ணங்கொண்டு அத்யயனம் கூடாதென்று சில

ரை விலக்குவது சரியல்லவென்று அபிப்பிராயப்படுவது சாஸ்தி ரங்களுடைய தத்வார்த்தங்களுக்கு விரோதமாயிருப்பதால் உசித மில்லையென்று அறிஞர்களுக்கு ஸ்பஷ்டமாய் விளங்கும்.

உபபத்திராதிபர்.

---

# ஸ்ரீ ஸோமயாகம்.

மாயவரம் பாலக்கரை மடத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ பாமஹம்ஸ ஸ்ரீவாசுதேவ ப்ரும்மேந்த்ரஸரஸ்வதி எனும் சுவாமிகள்பரிபாகத்திற்கேற்றபடி கர்மமார்க்கத்தையும், க்ஞானமார்க்கத்தையும் சிஷ்யர்களுக்கு உபதேசித்து வருகிறார்கள். அதிலீடுபட்ட குன்னம் பிரம்மஸ்ரீ கோதண்டராம தீக்ஷிதர் என்றஉத்தமர் சித்திரைமீ 17௳ ஸோமபூர்வாதாநஸங்கல்பம் செய்தார். இதற்கு தனஸஹாயம் புரிய ஸ்ரீமான்களான நெப்பதூர் கோதண்டராமய்யர், பூங்காவூர் வெங்கிட்டராவய்யர், குன்னம்சுப்பிரமண்ய அய்யர் மஹாதேவய்யர் முதலிய ஆஸ்திக கனவான்கள் முன்னே வந்தனர். எண்ணிறந்த தீக்ஷிதர்களும், ச்ரௌதிகளும், சாஸ்திரிகளும் வந்திருந்தனர். நெல்லிச்சேரி ஸ்ரீ சாம்பசிவ ச்ரௌதி குமாரர் பிரம்மஸ்ரீ ராமநாதச்ரௌதிகள் அத்வரம் செய்தார். ஸோமயாகம் அவருக்கு ஸந்தயாவந்தனம் போல் தங்குதடையின்றி ப்ரயோகம் மிக்க பலமாகச் சென்றது. அவரே ஸோமம் செய்து நித்யாக்னிஹோத்திரம் செய்யும் அநுஷ்டாதா ரித்விக்குகள் பதினறு பேறும் யஜ்வாக்களே பிரதிதினம் இரண்டல்லது மூன்றுபன்யாஸம் நடைபெற்றன. ச்வேதாரண்யம் அபிநவவ்யாஸ ஸ்ரீ நாராயணயஜ்வா ஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள், ஸர்வதோகம் ஸ்ரீ அண்ணுத்துரை தீக்ஷிதர், ஸ்ரீ. தி. நாராயணசாஸ்திரிகள், ஸ்ரீ தாதாசாரியார் முதலிய மஹாவித்வான்கள் யக்ஞம்என்றவிஷயத்தைக் குறித்து வெகு விஸ்தாரமாகவும், அழகாகவும், யுக்தியுக்தமாகவும் உபன்யஸித்தார்கள். ஸ்ரீ யஜ்வா ஸ்ரீமஹாஸ்வாமிகள் முதலிய பலாது ஆக்ஞையின்படி அடியேனும் தற்காலத்தில் தோன்றிய ஆக்ஷேபங்களுக்குப் பதில் கூறி இடையிடையே உபன்யஸிக்க நேர்ந்தது.

அத்வர்யுவின் அபார சுறுசுறுப்பு வாய்ந்த ஸாமர்த்தியத்தால் வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கே க்ருது பூர்த்தியாகி அவப்ருதத்திற்குக் கிளம்பப்பட்டது. பல்லாயிரஜனங்கள் கூட ஸ்நாநம் செய்ய வாத்யகோஷத்துடன் யக்ஞசாலைக்கு வந்து சேஷகார்யத்தை முடித்தனர். இரவு 8-மணிக்கு வித்வத்ஸம்பாவனை நடைபெற்றது. இவ்வாண்டில் குரு ஆசனுயிருப்பதன் பயனாக மற்றும் பல யாகங்கள் நடைபெறுகின்றன. இக்ருது வைதர்சித்த பின் ச்ரௌதத்திற்கு துர்பிக்ஷமில்லை என எல்லோருக்கும் நம்பிக்கை உதித்தது. உள்ளூர் அப்ராமணக்கக்ஷியும் சில பிராமணரும் ஒன்றுகூடி இதைக்கலைக்கத் தீவிர முயற்சி செய்தும் ஸர்வேசுவரனது கருணையால் யஜமானரது நல்ல அதிருஷ்டத்தால் ஒருவகைக் குறைபுமின்றி சிறப்பாக நடந்தேறியது.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

## விவாஹவயது மசோதா கண்டனக் கூட்டங்கள்.

14-1-22 இரவு 8-மணிக்கு வடாற்காடு ஜில்லா போளூரில் ரைஸ்மில் சொந்தக்காரர் பிரம்மஸ்ரீ வி. ரா. சுப்பிரமண்யய்யர் தலைமையில் அவர் விசாலமான பங்களாவில் ஓர் பெருங்கூட்டம் கூடியது. ஸ்ரீமதாசாரியாள் ஆக்ஞைப்படி அடியேன் சட்டத்தால் வருந்திங்கை விளக்க ஸ்ரீ ராமனுதன் B. A., L. T., ராஜமய்யங்கார் நாட்டு அண்ணாஜிராவ் முதலிய பலர் கண்டனத் தீர்மானத்தை ஆமோதித்து நிறைவேற்றினார்கள். பலகையெழுத்துக்கள் வாங்கி வைச்ராய்க்கு அனுப்பப்பட்டன.

ஆரணி

15-4-28 மாலை 4-மணிக்கு ஆரணி சுப்பிரமண்யஸ்வாமி கோவிலில் ஸ்ரீ சுப்பிரமணி அய்யர் ஹெட்மாஸ்டர் தலைமையில் ஓர் சபை கூடிற்று. வக்கீல் சங்கத் தலைவர் ஸ்ரீ அருணாசலய்யர்ப்ரேரிக்க தேவராஜராவ். ரங்காசார் முதலிய பல வக்கீல்கள் ஆமோதிக்கக்கண்டனத்தீர்மானம் நிறைவேறிவைச்ராய்க்கனுப்பப்பட்டது.

ஸ்ரீவத்ஸன்.

## காலத்தின்கதி.

ஆரியர்களே எழுந்திருங்கள். இனியுமா தூக்கம். களஞ்சியம் கொள்ளைபோகிறது. என்னென்று கூறுவது. நமது வீட்டுப் பொருளுக்கு எதிர்விட்டுக்காரர்கள் சொந்தக்காரர்களாம். மத்

யஸ்தர் ஆம் என்கிருர்போல் இருக்கிறது. நாம் இனியும் இதைப் பார்த்துக்கொண்டிருப்பதா. இனி நமது பிள்ளைகள் பிச்சைக்குப் போகவும் வழியில்லை என்ருகும். இது நீதியா! இப்படியும் தூக்கமா ! மயக்கமா ! மதிஈனமா ! நாம் மஹரிஷி குலத்தில் பிறந்தவர்களில்லையா, நம் குலதனம் எங்கு இருக்கிறது. எவ்வளவுயிருக்கிறது. வைத்தவிடம் எது ? காவலர் யார் ? இனியாவது எழுந்து முன் வாருங்கள்.

ஆரிய குல மணிகளே ! தீயை வைத்துவிட்டு வேடிக்கைப் பார்க்கிருன். சொந்தவீட்டுக் காரனும் அவனுடன் கூடி வேடிக்கை பார்த்து நகைத்துக்கொண்டிருப்பதுபோலிருக்கிறது. பிறகு இருவரும் இல்லத்திற்குத் திரும்பினுல் சொந்தக்காரன் எதைப் பார்பான். தீவைத்தவன் தன் வீட்டிற்குள்போய் சுகமனுபவிப்பான். இவன் கதியாது. சாசுவதமாயும் எண்ணி முடியாததுமான பொருள் உள்ள குடித்தனத்திற் பிறந்த சகோதரர்களுள் ஒருவருக்கொருவருள்ள சிற்சில குறைகளால் மனம் கசந்து சண்டையிடத் தலைப்பட்டனர். அச்சமயம் ஸம்மந்தமில்லாத சிலர் அவர்களிடம் சேர்ந்து விரோதத்தைப் பலப்படுத்திக் கோர்ட்டில் இழுத்துவிட்டனர். கடைசிவரை கோர்ட்டில் வாதாடி இருவருள் ஒருவர் ஜயமடைந்ததாய்ப் பெயராயிற்று. ஆனுலென்ன சொத்தைக் கணக்கிட ஆரம்பித்தனர். இருவரும் இன்ஸால்வெண்டானுர்கள். ஆகவே ஜயமடைந்தது யார். நடுவிலிருந்தவர்களே அத்தருணம் இருவருடைய மனமும் எவ்விதமாகும். கோட்டுக்குப் போனது முற்றிலும் பிசகென்றும் அயலானது பேச்சாற்கெட்டேனேஎன்றும் தோன்ருதா. இது ஒருபுறமிருக்கட்டும்.பிரகிருத்த்தைக் கவனிப்பாம்.

அகண்ட பூமண்டலத்தில் ஆதியில்லாமல் சாசுவதமாயிருந்து வருகிற புண்யபூமியென்றும், ஜம்பூத்வீபமென்றும், பரதகண்டமென்றும் பிரசித்திபெற்று ஈசுவரஸான்னித்யமும், ஈசுவராம்சமுள்ள பல்லாயிரம் ரிஷிகணங்களாலும், திவ்ய அவதாரங்களாலும் புனிதம் செய்யப் பெற்ற இந்த ஆர்யாவர்த்தத்தில்அழியாத த்ரயீமதம் என்ற இந்துமதஸர்வஸ்வம் பெற்று நம் முன்னோர்கள் தேவர்களையும தன் வீட்டிற்கழைப்பதும், அவர்களுக்குப்பிச்சை இடுவதும் அவர்கள் ஒரு ஸமயம் மீறினுல் அவர்களை சபிப்பதும்

என்ற பல துறைகளிலும் முன்னேறிக்கொண்டு ஸாம்ராஜ்ய ஸிம் மாஸனத்தில் அட்டஹாஸம்செய்துகொண்டுவந்தார்களென்பதை மறுக்க யாராவது இக்காலத்திலாவது முன்னுக்குவர முடியுமா. நம் ஆர்யாவர்த்தம் எல்லா புவனங்களிலும் மிகவுயர்ந்ததெனவும் இங்குள்ள மனிதர்களைமீற தேவர்களாலும் அசுரர்களாலும் முடியாதெனவும் ஓர் கவி.

रामः क्षेमस्य दाता भुवि ननु मनुजो रावणस्य प्रहर्ता
तत्तातः किं नु मर्त्यः त्रिदशकुलपतेर्दैत्ययुद्धे सहायः ।
कृष्णो वृष्णो मुदं योऽहरत नरतया न श्रुतः किं त्वयाऽसौ
के वा देवाः प्रभावात् स्वयमतिशयिता मानुषाद्दानवा वा ॥

ராம: க்ஷேமஸ்ய தாதா புவி நநு மநுஜோ ராவண
ஸ்ய ப்ரஹர்தா தத்தாத: கிம் நு மர்த்ய: த்ரிதசகுலபதே
ர்தைத்யயுத்தே ஸஹாய: । க்ருஷ்ணோ வ்ருஷ்ணோ முதம் யோऽ
ஹரத நரதயா ந ச்ருத: கிம் த்வயாऽஸௌ கே வா தேவா:
ப்ரபாவாத்ஸ்வயமதிசயிதா மாநுஷாத்தாநவா வா ।

உலகினில் அரக்கர்களின் அமளியை அடக்கி க்ஷேமத்தை நிலை நாட்டிய ராமன் மனிதனல்லவா மூன்றுலோகத்தாலும் அடக்க முடியாது வரம் பெற்ற ராவணனை அழிக்கவில்லையா. அவரது தந்தை மூவுலகத்திற்கும் பதியான இந்திரனுக்கும் அடிக்கடி அசுரர்களாலேற்படும் இடுக்கண்களைவேறரக்களைந்து யுத்தத்தில்சகாயமாய் நின்றுவெற்றிமாலைசூட்டிக்கொடுத்ததசரதர் மனிதனல்லவா விருஷ்ணி குலத்தில் அவதரித்த மனிதனென்ற கியாதியைப் பெற்ற கிருஷ்ணன் செய்தவுபகாரம் உன் காதில் விழவில்லையா. தேவர்களோ அஸுரர்களோ மனிதனைமீறி எவ்வளவு காலம் சுகமடைந்தனரென்கிறீர். வீணில்வளர்ப்பானேன். மும்மூர்த்திகளும் மகிமையடைவதற்கு அவர்கள் மானிடராய்ப் பிறக்காமற் போனதேது. தக்ஷிணாமூர்த்தியும் மௌனமாய்விட வருக்ஷத்தினடியில் உட்கார்ந்து மௌன வ்யாக்கியானம் செய்தால் ஸனகாதி நால்வரே முக்தர்களாவர் வேறு யாருக்குப் பயன் கிடைக்குமென்றே எண்ணி அவ்விரதத்தை உதறிப் புவியில் சங்கராசாரியரூபமாய் மானிடதேகத்திற் தோன்றினர். இத்தகையோர்களின் அவதாரம் பூலோகத்திலென்று பொதுவாய்க் கூறுவது பொருந்தாது. ஒரு

வாறு பூலோகத்திற்கு ஓர் மகிமையைக் கொடுத்தாலும் விசேஷமாய் ஓரிடத்தில் தான் அவதரிக்க வேண்டுமென்று நெருங்கிப் பார்த்தால் அகண்ட பூமண்டலத்திலும் பரதகண்டமென்ற நம் கண்டத்தில் தானென்றால் இக்கண்டத்திற்கு மட்டிலும் ஏனைய கண்டங்களைக் காட்டிலும் விசேஷ மகிமை அளவிறந்ததெனக் கூறல் வேண்டுமோ. இனி இக்கண்டத்தில் ஏதாவது விசேஷமுண்டா. ஏன் தேவர்கள் யாவரும் இங்கேயே வருகிறார்கள். அல்லது இவர்கள் இங்கு வந்ததால்தான் இந்த கண்டம் மகிமை பெற்றதென்று சொல்லிவிடலாமாவென்றால் இருவழியையும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். இது ஒருகாலும் அழியாத புண்யபூமி. ஆனதுபற்றியே எல்லோருடைய அவதாரமுமேற்பட்டதெனலாம். தேவர்களது அவதாரமேற்பட்டதால்தான் இந்த கண்டம் புண்யபூமியாயிற்றென்றும் கூறலாம். ஆகவே புண்யபூமியில் பிறப்பவர்கள் புண்யம் செய்தவர்கள்தான். புண்ய பூமியில் இருக்கும் பதார்த்தம் தேவர்களால் உண்டுபண்ணப் பெற்றதென்றும் அதனால் முதலில் இங்குள்ளயாவும் தேவர்களுடையதானதால் அவர்களிடம் நன்றிபாராட்டி அவர்களுடன் கூடிக்கலந்து அனுபவியுங்களென்று கீதாதிசாஸ்திரங்கள் நமக்கு உபதேசிக்கிறது இதனால்நமக்கு தேவர்கள் பரமகதியென்றும் அவர்களுக்கு நாம்தான் கதியென்றும் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்றுதான் நினைத்து நம்முன்னோர்கள் யோகபோகங்களை அனுபவித்து வந்தனர். இந்த எண்ணம் நிலைநின்றுலாவிவந்தவளவும் நம்தேசத்துப் பொக்கிஷத்துக்குத் திருடர்களோ பொறாமைக்காரர்களோ ஏற்படவில்லை அது நாளுக்குநாள் குறைபடத் தலைப்பட்டுவிட்டது. நாம் தேவர்களை மறந்தோம் அகங்காரம் தடித்தது அண்ணன் தம்பி என்றவரம்பு உடைந்தது. அனர்த்தம் மேன்மேலும் புதிது புதிதாய்க் கிளம்புகிறது இவ்விதம் சின்னாட்கள் கழிந்தனவென்றும் கூறிக்கொள்ளலாம் ஆயினும் முற்றிலும் அவ்விதம் சொல்ல தைரியமில்லை.

இனித்தற்காலம் நமக்கிருக்கும் அதிருஷ்டத்தைக் கவனிப்பாம். இந்தியாவென்ற இப்பாத கண்டத்தில் நமதுகுலமதமான ஆர்யமதத்தின் மேல் எத்தனையோ மதங்கள் பாவி அழித்தன போல் நிமிஷக்கணக்கில் பிரகாசித்து உடனே அவை அழிந்து போயின. அப்போது அசையாக்கல்லாய் நின்றுபொறுத்திருந்தது

நம் மதம் பயிர்களை மூடுவதுபோல் மூடின அம்மாசுகளை உடைய வன் வந்து பிடுங்கியெறிந்தபின் பயிர் செழிப்புற்றோங்கி வளர் வது போல் அவதார மூர்த்திகள் துர்மதங்களைக் கண்டித்தெறி ந்த பின் நாம் திவ்ய பலனை அனுபவித்து வந்தோம். இக்காலத் தோ கெட்ட ஸகவாஸ வாஸனையால் தன் குலமகிமையை மறந்து வேடனாய்த் திரியும் ராஜகுமாரன்போல் நாம் மகிமைதெரியாமல் அலைகிறோம். ஏதோ நமக்கு சுகம் ஒன்று அழிவற்றதாய் உண் டென்றும் அதுதான் நமக்குக் குலதனமென்றும் அதையேநம் முன்னோர்கள் அனுபவித்து சுகமாய் வாழ்ந்து வந்தனரென்றும் மட்டிலும் ஒருவாறு நிச்சயமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறோம். இம்மட்டிற் போதுமா. காரணம் இன்றியமையாதது ஒன்றுதா னிருக்க வேண்டும். அது யாது என்பதை ஊன்றியறியப் பாதை யைத் தேடுவதுதான் புத்திசாலித்தனம். அதைவிட்டு கேவலம் சுகத்தை மட்டிலும் எவ்விதமாயினும் அடைந்தே தீரவேண்டுமெ ன்று தாகம் கொண்டு அதன் காரணம் இன்னதென்றறியாமல் யாராவதொருவன் நம் முன்னோர்களின் பரமசுகத்தை அடைய வழி இன்னதென்று மேடையிலேறிக் கூசாமல் சரமாரி போல வாய் மாரி பொழிந்தால் அச்சொல்லின் சமத்காரத்தில் மயங்கி அவனைச் சிலர் பின் தொடர ஆரம்பிக்கின்றனர். பிறகு அவர்கள் தொடர்கின்றனரே நாமும் தொடர்வாமென்று நிர்ப்பந் தத்தாலும், தாக்ஷிண்யத்தாலும்அறியாமையாலும் பலர் தொடர் கின்றனர். இவ்விதமாய்க்கடைசியில் அப்புருஷன் இருமாப்ப டைந்து பல்வழிகளில் அவர்களை இழுத்துத்தள்ளிவிட்டுத்தானும் கெடுகிறான். இது நமக்கு அனுபவசித்தம். இவ்விதமாய் நாம் இப்போது இக்கோலத்திற்கு வந்ததில் நம்மை ஸ்திரபுத்தியற்ற வர்களென்றும், கட்டுப்பாடற்றவர்களென்றும், ஒற்றுமையற்ற வர்களென்றும், இவர்களை எவ்வழியிலும் ஸ்வாதீனம் செய்து கொண்டு விடலாமென்றும், பிச்சைக்காசு கையிற்கொஞ்சம்கொ டுத்துவிட்டால் எவ்விதமேனும் சொன்னபடி கூத்தாடுவார்களெ ன்றும் பிறன் நம்மை நன்கு அறிந்துகொண்டு விட்டான்.

(தொடரும்.)

M. N, சுப்பிரமண்யசாஸ்திரியள்.

ஸ்ரீ சங்கர வித்யாசாலையின்

# வருஷபூர்த்தி கொண்டாட்டம்.

திருவானைக்காவல் ஸ்ரீ சங்கரவித்யாசாலையின் வருஷபூர்த்தி கொண்டாட்டம் ஸ்ரீமான் ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் திருச்சி ஸப்ஜட்ஜ் மகா-ா-ஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களது அக்கிராஸனத்தில் செவ்வாய்க்கிழமை 24—4—28 காலை 7½-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது. இவ்வித்யா சாலையை நடத்திவரும் பிரணதார்த்திஹர சாஸ்திரிகளால் அக்ரா ஸனர் அவர்களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஓர் வரவேற்புப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. அவ்வமயம் K. S. ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்கள் (M. L. A.) பிரம்மஸ்ரீ போலகம் சுந்தரசாஸ் திரிகள் மற்றும் பல கனவான்களும் விஜயம் செய்திருந்தனர் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாளுக்குப் பூஜைமுதலானதுகள் செய்து கூட்டம் ஆரம்பிவிக்கப்பட்டது. கலாசாலையின் வருஷாந்திர அறிக்கைபடிக்கப்பட்டபின்னர் மாணவிமாணவர்களுக்கு அக்ரா ஸனரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

அக்ராஸனரின் சொற்பொழிவு.

மிகப்பழமையானதும் ஸகல பாஷைகளுக்கும் தாய்பாஷை யாகவும் நாகரீகத்திற்கே ஊற்றிடமாகவும் உள்ள ஸம்ஸ்கிருத பாஷையை இவ்விடம் கற்பிப்பதற்கு மிகவும் சந்தோஷப்படு கிறேன். தற்காலத்தில் ஜனத்தொகையின் பலத்தைக்கொண்டே மானிடஸமூகத்தின் முன்னேற்றம் மதிப்பிடப்படுகிறது.

ராஜீயஸமூகங்களில் முன்னேற்றமடையக் கல்வியே அடிப் படையான காரணமாகும். ஓர் தேசமும் மதமும் கல்வியின் அள வைப்பொருத்தே முன்னேற்றமடைகிறது. உண்மையில் ஓர் தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானல் மதம் தேசம் சமூகம் மூன்றினிடத்திலும் பக்திவேண்டும் எதாகிலும் ஒன்றில் பக்தி இல்லாமலிருக்குமானல் உண்மையாக சரியான வழியில் எதிர் பார்க்குமளவு பலனை உண்டுபண்ணமுடியாது. மைத்ததையும் மதா னுஷ்டான ஆசாரத்தையும் புறக்கணித்துச் செய்ய முயற்சிக்கப் படும் தேசிய சமூக முன்னேற்றங்கள் நீடித்த காலம் அமைதி யான வழியில் பிரயோஜனத்தை உண்டுபண்ண முடியாது. தற் காலம் தேசபக்தியெனவும் சமூகசேவையெனவும் சொல்லிப் பிரசாரம் செய்கிறவர்களில் சிலர் இத்தத்வத்தை அறியாமல் தவ

ஞான வழியில் பாடுபடுகின்றனர். தேசபக்தி எனில் மதாசாரங்களையும் கடமைகளையும் புறக்கணித்தல் என்பது பொருளல்ல. மதானுஷ்டானங்களால் தீமையில்லை. நன்மைகள் பல இருக்கின்றன. எனவே மூன்றிற்கும் ஸேவைசெய்ய உபயோகமுள்ள ஸம்ஸ்கிருத பாஷையின் பயிற்சி அவச்யம் வேண்டும். கிரீக்லாடின் பாஷைகளுடைய பேசுங்காலம் கடந்து 2000, 3000வருஷங்களுக்குமேல் ஆகிவிட்டன. ஆயினும் அதன் உயர்வைக் கருதி இன்னும்பலர் அப்பியசித்ததால்தான்(Paradize lost)பேரடைஸ் லாஸ்ட் போன்ற நூல்கள் இயற்றப்படலாயின, அவ்விதமே ஸம்ஸ்கிருத பாஷையின் அப்பியாஸமும் அவசியமாகும். மூலபாஷையின் சுவைஞானமின்றி எப்பாஷையை எவ்வளவு படித்தாலும் பாஷையின் சுவையும் வீர்யமும் சக்தியும் பிரகாசியாது உயிரற்றதாகவே விளங்கும். இருப்பதை இழக்காதுகாத்தாலும் அதை அபிவிருத்தி செய்தலுமே மானிடரின் கடமையாகும். எனவே ஸம்ஸ்கிருதத்தைக் கைவிடாமல் அபிவிருத்தி செய்தல் அவச்யம்.

ஸ்திரீகளும் புருஷர்களும் ஸம்ஸ்கிருத மாத்திரமன்றி ராஜீய பொருளாதார நானாத்துறைகளிலும் அறிவைப் பெருக்கிக்கொள்ளுதல் அவசியம், ஸம்ஸ்கிருத பாஷையை இறந்த பாஷையெனக் கூறுவது சரியல்ல. எல்லாபாஷைகளிலும் சம்மந்தமுடையதாயும் இந்தியாவில் எல்லாபாஷைகளைக் காட்டிலும் தினசரி கடமைகளிலும் மதஸம்ஸ்காரங்களிலும் அனுஷ்டானத்திலிருந்துவரும் இப்பாஷையானது உயிர் நிலையினின்று பிரழவில்லை என்பதே அறிவுறுத்துகிறது. ஜனங்களின் உதவியின்றி எவ்வளவு பெரியதலைவர்களாலும் எக்காரியத்தையும் சாதிக்க முடியாது. ஜனங்களின் கல்வியறிவைக்கொண்டே தேசமுன்னேற்றம் மதிப்பிடவேண்டும். பௌதிக சாஸ்திரத்தின் உருவம் ஸம்ஸ்கிருதபாஷையால் தான் நிலைநிறுத்த முடியும். ஸம்ஸ்கிருத நூல்களைச் சிறிதும் ஆராயாது அதை தேசிய வாசனையற்ற கதைகள் எனவும் ஜனங்களின் நன்மைக்கான வழிகளில் உபயோகப்படக் கூடாத பாஷையெனவும்கூறுகின்றனர். ஸம்ஸ்கிருதத்தின் ஓர்பகுதியாகிய ஆயுர்வேதம் தேசஸேவையின் அம்சமாகும். அவ்வாறே சமூக ஸேவை முதலியவற்றை அமைதியுடனும் த்வேஷம் முதலியன இல்லாமலும் ஆவதற்கே நமது நூல்கள் மிகவும் உதவிபுரிகின்றன. ஆத்மா உயர்வடையும் மார்க்கத்தைப் போதிப்பதால் இதுவும் ஓர் தேச

ஸேவையே. மதத்தினின்றும் வழுவி ஆத்மா தாழ்வடையச் செய்யும் காரியம் ஆத்மத்ரோகம் ஆகும். இப்பொழுது கல்வி இலாகா நம்மிடம் விடப்பட்டிருப்பதால் நமது கடமையை அறிந்து கல்வி உயர்வடையும் வழியும் ஸம்ஸ்கிருதம்பறவும்வழியிலும் அதை உபயோகித்துக் கொள்வோமாக, இக்கலாசாலையின் விடா முயற்சி தைர்யம் வீரத்தன்மையுள்ள மாணவர்களை அளிக்குமாக.

பிறகு பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகள் விரிவாகப் பேசியவுடன் அக்கிராஸனருக்கும்சபையோர்களுக்கும்வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

## ஸ்ரீசங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

திருவானைக்கோவில் ஸ்ரீ சங்கரவித்யாசாலையில்கொண்டயம் பேட்டை அக்ரஹாரம் 28-4-28 தேதியில் பிரம்மஸ்ரீ V. S. வெங்கடராமசாஸ்திரிகள் அவர்களால் ப்ராசீன வித்தியாப்யாசம் என்னும் விஷயம் உபன்யஸிக்கப்பட்டு ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுக்கு ஸஹஸ்ரநாமம் முதலிய அர்ச்சனை வைபவங்களுடன் ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவம் விமரிசையாக நடைபெற்றது.

R. நடராஜன்

ஜம்புகேசுவரம் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமியள் ஸ்ரீ மடத்தில் 24-4-28 செவ்வாய்க்கிழமையன்று முதல் 5-தினங்களில் ஒவ்வொருதினத்திலும் காலையில் பகவத்பாதாளுடைய ஆராதன, அர்ச்சன, நைவேத்தியங்களும் மாலை 7-மணி முதல் 8½-மணி வரையில் பிரம்மஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ பகவத்பாதாள் சரித்திர உபன்யாஸமும் விமரிசையாய் நடந்து, ஐந்தாவது தினமாகிய சனிக்கிழமையன்று மாலை 8-மணிக்கு புஷ்பாதிகளினால் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் ஸ்ரீபகவத்பாதாசார்யாளுடைய திருவுருவப்படத்தின் ஊர்வலக் காக்ஷியானது வேதபாராயணத்துடனும் வாத்திய கோஷத்துடனும் விமரிசையாய் நடந்து பிறகு ஸ்ரீமடத்தில் வித்யாஸ்தானத்தில் படிக்கும் வித்தியார்த்திகளுடைய முயற்சியால் சந்தன புஷ்ப தாம்பூல வகையராக்கள் வழங்கப்பட்டு ஸ்ரீமத்பகவத்பாதாளுடைய உத்ஸவம் இனிது நிறைவேறிற்று.

நாராயணகனபாடிகள்,
வேத உபாத்தியாயர்.